டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சைதை சாதிக் சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்! கல்வெட்டு திறப்பு!

## ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப்.19 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் பரணிபுத்தூர் ஊராட்சி தி.மு.க. சார்பில் இன்று (19-9-2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் பரணிபுத்தூர் ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய கல்வெட்டு திறப்பு விழா மற்றும் திராவிட முதல்வர் தளபதி ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் நடைபெறும் இப்பொது கூட்டத்திற்கு கௌரிதாமோதரன், எஸ்.சந்தானம், சி.பாண்டியன், கு.பிரவீன் குமார், எஸ்.புகழ்வாணன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

கலாவதி சந்தானம், பா.மகேஸ்வரன், ராசாமணி சகாதேவன், து.ஜெயராமன், எ.தாமோதரன், க.செந்தில்குமார், எஸ்.சக்திவேல், ஐ.குமார், எம்.முகமது நாசர், எஸ்.நித்தியானந்தம், எம்.சீனிவாசன், உ.ரஞ்சித், கே.செல்வகுமார், எஸ்.புருஷோத்தமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன், கழக பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய குழு துணைத்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பொன்.ஜீவா, கே.வசீகரன், பூங்கொடிஅரசு, எஸ். ராஜா தேசிங்கு, பா.ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், ப.குமரவேல், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், தா.அன்பழகன், தமிழரசிசுரேஷ், சுலைமான் சையத், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் எஸ். ஜனார்த்தனன், எம்.ஆர். நவீன் ராஜ், வெ.கவிபாரதி, பி.கதிரவன், பா.கு.தமிழ்வாணன், ஆர்.பிரபு, வெ.வசந்தகுமார், ரா.ஹரிபாபு, து.நாராயணன், காமாட்சி பாலு, ஜோஸ்பின் கிளாரா, அமுதா சத்யபிரியா, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி எத்திராஜ், கே.சுதாகரன், அண்ணமாள் மோகன், ஜெமீலா பாண்டுரங்கன், திவ்யா சத்தியநாதன், பா.சுதாகர், கே.அரசு, எஸ்.பாண்டியன், சாந்தா தேவிசுகுமார், வனிதா ராமகிருஷ்ணன், லைலா தினகரன், து.லோகநாதன், கை. சண்முகசுந்தரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

தினேஷ் ஆனந்தன், கே.அறிவழகன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

எனவே இந்நிகழ்ச்சியில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழகத்தை சார்ந்த கழக முன்னோடிகள், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஒன்றியச் செயலாளர் ஏ. வந்தேமாதரம் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.,- அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப்.19-

தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டிற்காகவும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாள் முழுவதும் ஓயாது பாடுபட்ட உத்தமர்

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளான செப்டம்பர் 15 ல் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக மோகனூர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் சி மணிமாறன் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன் மாநில நிர்வாகிகள் ராணி, நக்கீரன், நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகர செயலாளர்கள் செ.பூபதி, அ. சிவக்குமார், ராணா ஆர். ஆனந்த், நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, நாமக்கல் ஒன்றிய செயலாளர் வி.கே. பழனிவேல், நாம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

மாதம் 1000 ரூபாய் வழங்கும்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

## கரூர் மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டது!

கரூர், செப்.19.

மகளிருக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் கரூர் மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர் கரூர் அட்லஸ் கலையரங்கத்தில் நடைபெற்ற விழா நிகழ்வில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார். கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி,(கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி கவிதா கணேசன், துணை மேயர் ப.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இந்த திட்டத்தின் நோக்கத்தை கூறியிருக்கிறார். அதனை ஒரு தொகையாக வழங்காமல் மகளிருக்கான உரிமையாக அங்கீகரித்து வழங்கக்கூடிய இந்த திட்டம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க திட்டமாகும். இந்த முன்னோடி திட்டத்தை சிந்தித்து செயல்படுத்தி இருக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நாம் கண்டிப்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்ள வேண்டும். இந்த திட்டம் கடந்த இரண்டு மூன்று மாதங்களாகவே அதிகமாக திட்டமிட்டு பொது மக்களுக்கு எந்த வித சிரமமும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய மாநிலம் முழுவதும் முதலமைச்சர் அவர்கள் மற்றும் தலைமை செயலாளர் வழிகாட்டுதலின்படி நாங்கள் அதை செய்தோம்.

நம்முடைய அரசு அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

மாதம் பணம் உங்களுக்கு உங்களுடைய வங்கி கணக்கில் நேரடியாக வந்துவிடும். ஆகையால் யாராவது எ டி எம் கார்டுகளை எண்கள் குறித்து கேட்டால் தகவல் அளிக்காதீர்கள். இது தொடர்பாக வங்கி அலுவலர்கள் தொடர்பு கொள்ளமாட்டார்கள். வங்கியில் இருந்து பெறப்பட்ட ஏ. டி. எம் கார்டுகளை நீங்கள் கவனத்துடன் கையாள வேண்டும் அதேபோல உங்களுக்கு எந்த சந்தேகங்கள் இருந்தாலும் ஏதாவது ஒரு குறையோ இருந்தால் நீங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் இந்த அனைத்து அலுவலகங்களில் உங்களுக்காக உதவி மையம் அமைத்துள்ளோம். உங்களுடைய சந்தேகங்களை யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளலாம். தொலைபேசி எண் ஒவ்வொரு உதவி மையத்திற்கும் உள்ளது. எண்களில் தொடர்பு கொண்டு உங்களுடைய சந்தேகங்களை தெரிவித்துக் கொள்ளலாம் என்றார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் கந்தராஜ், மகளிர் திட்ட இயக்குநர் சீனிவாசன், மாவட்ட ஊராட்சி துணை தலைவர் தேன்மொழி, மண்டல தலைவர்கள் சக்திவேல், கனகராஜ். முதன்மை மண்டல மேலாளர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி V.D.பாணி, மாவட்ட அஞ்சல் கண்காணிப்பாளர் ராஜ்குமாரி. தனித்துணை ஆட்சியர் சைபுதீன், வருவாய் கோட்டாட்சியர்கள் ரூபினா (கரூர்), கருணாகரன்(குளித்தலை), மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி நகரக் கழகச் செயலாளரும், நகர மன்றத் துணைத் தலைவருமான வி.பி.பி.பரமகுரு உடல் நலக்குறைவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் வரும் 20ஆம் தேதி கழக இளைஞரணிச் செயலாளர் – விளையாட்டு மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொற்கிழி வழங்குவது மற்றும் மதுரை கிழக்கு தொகுதியில் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா மற்றும் இளைஞர் அணி கூட்டம் அதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் – வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். இதில் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, சுப.த.சம்பத், எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், நேரு பாண்டியன், வடிவேல் முருகன், முகமது யாசின் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., முன்னிலை! மயிலாடுதுறை மாவட்டம்

# செம்பனார்கோயிலில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

நாகை. செப்.19-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம், வேலைவாய்ப்பு துறை சார்பில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலை வகித்தார்.

முகாமில் சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசுகையில் தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு வெற்றிக்கரமான பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் அழைத்து செல்லும் விதமாக இம்முகாம் நடைபெறுகிறது. மயிலாடுதுறை மாவட்டம் முதல் 3 சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக திகழ்கிறது. கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்த வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுகிறது. வேலை வாய்ப்பை உருவாக்கி தந்து பல வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வழங்கும் விதமாக இம் முகாம் உள்ளது. இம்முகாம் நடைபெறும் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நிறைய மரங்கள் இருப்பது மிகவும் நன்மையான ஒன்று.

அதுபோல் மயிலாடுதுறை மாவட்டம் பசுமை மிகுந்த மாவட்டமாக மாற அதிக மரங்களை நட்டு நன்கு பராமரித்து மரங்களை உருவாக்க வேண்டும். பல்வேறு படித்த இளைஞர்கள் வேலைக்கு செல்லும போது எப்படி வேலைக்கு போக போகிறோம் என்ற எண்ணத்திலும் குறைவாக சம்பளம் என்ற எண்ணத்திலும் இளைஞர் வேலை தேடுவத்தில் மிகுந்த சிரமமான சூழல் இருந்து வந்தது. ஆனால் தற்போது அந்நிலை மாறி அரசே முன் வந்து பல்வேறு படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வழங்கிடும் விதமாக இந்த முகாம் நடைபெறுகிறது.

தாங்கள் இது போன்ற அரசின் பல்வேறு திட்டங்களை பயன்படுததி கொள்ள வேண்டும்.

அரசு மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்தி பொருளாதாரம் வேலை வாய்ப்பாப இருக்கட்டும். இதை தவிர பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி பொருளாதாரம் வேலை வாய்ப்பாக இருக்கட்டும. இதை தவிர பல்வேறு திட்டங்களை அரசு மக்களுக்காக நல்ல முறையில் செய்து வருகிறது. தாங்கள் இந்த வாய்பினை பயன்படுத்தி கொள்ள வேண்டும். இந்த வேலை வாய்ப்பு முகாமில் சென்னை, திருப்பூர், கோவை, திருச்சி, தஞ்சை மற்றும் மயிலாடுதுறை உள்ளிட்ட ஊர்களிலிருந்து வந்த தனியார் நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளது.

இந்த முகாமில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள 8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்தோர், டிப்ளமோ, ஐடிஐ, பட்டதாரிகள், நர்சிங் மற்றும் பி.ஈ. படித்த இளைஞர்கள், இளம் பெண்கள் என மொத்தம் 2949க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டவர்களின் மாற்றுத்றனாளிகள் உட்பட 297 க்கும் மேப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்ட உள்ளது. 475 நபர்கள் இரண்டாம் கட்ட தேர்விற்கும் 137 நபர்கள் திறன் பயிற்சிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

விழாவில் சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை எஸ்.ராஜ்குமார், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்துமகேந்திதரன், ஜி.என்.ரவி,

மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் யெலளார்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், என். இளையபெருமாள், ஞான. இமையநாதன், பி.முருகமணி, மூவலூர் எம்.மூர்த்தி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், செல்லசேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா,

நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்பராயன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் வி.ஜெயகிரகாஷ், கே.மகேந்திதரன், நந்தினிஸ்ரீதர், காமாட்சி மூர்த்தி, சகுண சங்கரி மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் சௌமியன், எம்.கே.மருது, பாலமுருகன், தீபாசத்தியேந்திரன், இரா.மனோகரன், காளி.சேதசப்பன், ஆர். எஸ்.ஸ்ரீதர் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொணடனர்.

# சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் வெளுத்து வாங்கிய கனமழை!

சென்னை, செப்.19-

எழும்பூர், சென்ட்ரல், சிந்தாதரிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் மழை வெளுத்து வாங்கியது.

கனமழை பெய்து வருவதால் வெப்பம் தணிந்து சென்னையில் குளிர்ச்சியான சூழல் ஏற்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. சைதாப்பேட்டை, கிண்டி, ஆலந்தூர், ஆதம்பாக்கம், திருவல்லிக்கேணி, சேப்பாக்கம், சேத்துப்பட்டு, எழும்பூர், சென்ட்ரல், சிந்தாதரிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் மழை வெளுத்து வாங்கியது.

வேளச்சேரி, தரமணி, கந்தன்சாவடி, பெருங்குடி உள்ளிட்ட பகுதிகளிலும் கனமழை பெய்தது.

சென்னையில் காலை முதல் மாலை வரை வெயில் சுட்டெரிக்கின்றது. இரவு நேரங்களில் மழை வெளுத்து வாங்கி வருகிறது.

கனமழை பெய்து வருவதால் வெப்பம் தணிந்து சென்னையில் குளிர்ச்சியான சூழல் ஏற்பட்டுள்ளது.




திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, மு.பெ.கிரி எம்.எல்.ஏ, எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், க.சௌந்தரராஜன், ப.கார்த்திவேல்மாறன், விஜயலட்சுமிரமேஷ், நிர்மலாவேல்மாறன், காலேஜ் ரவி, சு.ராஜாங்கம், ஆராஞ்சி ஆறுமுகம், மெய்யூர் சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.